ஜடையம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. ஆர்.கே. பழனிசாமி

ந.க.எண். 20/2023/ஜ.ஊ நாள்: 25.08.2023

பொருள்: மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - கோயம்புத்தூர் மண்டலம்-கோயம்புத்தூர் மாவட்டம்-மேட்டுப்பாளையம் வட்டம் - காரமடை ஒன்றியம் - ஜடையம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் - க.ச.எண்கள். 616/1A, 1B, 2A, 2B, 3, 617/1, 617/2, 618/1C, - ல் 9.71 - ல் ஏக்கர் (அ) 39300.00 ச.மீ பரப்பளவில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் ம.வ.கோ.ம எண் : 106/2023 இன் வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்.

பார்வை:
1. அரசாணை எண் 78 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ4(3)துறை நாள்: 04.05.2017.
2. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் ROC.No.V6T51U3Q/2022-REGION/2022/TCP, நாள்: 28.04.2023
3. சார்பதிவாளர், மேட்டுப்பாளையம் அவர்களின் ஆவண எண்: 1771/2023
4. ஜடையம்பாளையம் ஊராட்சி மன்ற தீர்மானம் எண்: 85. நாள்: 27.07.2023.
5. S. சுப்புலட்சுமி, A.மோனிஷா, 5/141, சுண்டக்கரை புதூர், வெள்ளியங்காடு, மேட்டுப்பாளையம் என்பவரின் SBI வங்கியில் E-செலான் எண். 20230818012258, நாள். 18.08.2023 மற்றும் ஜடையம்பாளையம் ஊராட்சியின் பல்வகை வரவு ரசீது எண்: 73109, நாள். 25.08.2023

*****

பார்வை 2இல் காண் நடவடிக்கைகளின் படி காரமடை ஊராட்சி ஒன்றியம் ஜடையம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் க.ச.எண்கள். 616/1A, 1B, 2A, 2B, 3, 617/1, 617/2, 618/1C, - ல் 9.71 - ல் (அ) 39300.00 ச.மீ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ.கோ.ம எண். 106/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை (1)இல் காண் அரசாணையின்படி புன்செய் விவசாய பகுதியிலிருந்து விவசாயமல்லாத குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்திக்கு மாற்ற நில உபயோக மாற்ற பயன்பாட்டிற்கு பரிசீலனைக்கட்டணம் தொகை ரூ.1000/-யினை நாள்: 25.08.2023 ம் மற்றும் விதி 9 இன் படி மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் 3 சதவிகிதம் தொகை ரூ.11,93,738/- யினை 18.08.2023 ஆம் தேதியில் உரிய அரசுத்தலைப்பில் செலுத்தப்பட்டு பார்வை(5)இல் காண் செலுத்துகை சீட்டுகள் வாயிலாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2) இல் காண் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களது நடவடிக்கைகளின் படி ஒப்புதல் அளித்த க.ச.எண்கள். 616/1A, 1B, 2A, 2B, 3, 617/1, 617/2, 618/1C, - ல் 9.71 - ல் ஏக்கர் (அ) 39300.00 ச.மீ பரப்பளவில் அமையப்பெறும் உத்தேச மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வரைபடத்தில் குறிப்பிட்டவாறு பொது இடங்கள், சாலைகள் மற்றும் சாலை வளைவுகள் காரமடை மேட்டுப்பாளையம், சார்பதிவாளர், அலுவலக தானக்கிரைய ஆவணம் எண். 1771/2023 மூலம் தலைவர், ஜடையம்பாளையம் ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஜடையம்பாளையம் ஊராட்சிக்குட்பட்ட க.ச.எண்கள். 616/1A, 1B, 2A, 2B, 3, 617/1, 617/2, 618/1C, - ல் 9.71 - ல் ஏக்கர் (அ) 39300.00 ச.மீ பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்தும் ம.வ.(கோ.ம) எண். 106/2023 மனைப்பிரிவினை அங்கீகரித்தும் இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. இரு சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும்.

2. அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிடவரம்பு விடப்பட வேண்டும் மனைப்பிரிவில் அமையும் 23 அடி அகல சாலைக்கு 5அடி மற்றும் 30 அடி மற்றும் 40 அடி சாலைக்கு 10 அடி என கட்டிட வரம்பு விடப்பட வேண்டும். ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகளின் படி மனையின் எல்லைக்கும் கட்டிட வரம்புக்கும் உட்பட்ட நிலைபகுதியினை தெருவின் உயர்மட்டத்தில் இருந்து 6 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த விதமான கட்டிடமோ, சுற்றுச்சுவரோ அமைத்தல் கூடாது.

3. மனையின் பக்க எல்லைக்கும் கட்டிடத்திற்கும் இடையில் ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது. 5 அடி அல்லது 1 பக்கத்தில் மட்டும் 5 அடி திறந்த வேலி விடப்படவேண்டும்.

4. 30 அடிக்கு அதிகமாக உள்ள அனைத்து தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்தாற்போல் அடுத்தடுத்து 30 அடிக்கு மிகைபடாமல் சாலையில் எல்லையில் இருந்து 3.23 அடிக்குள் அமைக்கப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒவ்வொரு கட்டிடத்திற்கும் முன் அனுமதி பெற வேண்டும்.

6. மனையின் சொந்தக்காரர்கள் மேற்படி நிபந்தனைகளுக்கு உட்படுவதாக எழுத்துமூலமாக நிர்வாக அதிகாரிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். மனைகள் வாங்குபவரையும் விற்பவரையும் கட்டுப்படுத்தும் வகையில் மேற்படி நிபந்தனைகளை விற்பனை பத்திரங்களின் சேர்க்கப்பட வேண்டும்.
7. மனைப்பிரிவு ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைகளை உட்பிரிவு செய்து விற்பனை செய்ய கூடாது.
8. உள்ளாட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடங்களை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றி வருவாய்துறை மூலம் உட்பிரிவுகள் 90 தினங்களுக்குள் செய்து வழங்கபட வேண்டும்.
9. மனைப்பிரிவில் அமைய பெறும் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் தெருவிளக்களுக்கான மின்கட்டணத்தை மனைப்பிரிவு அபிவிருத்தியாளரால் அனைத்து மனைகளிலும் வீடுகள் கட்டி வீட்டு வரி விதிப்பு எண் பெறப்பட்டு தனி மனையில் அனைவரும் குடியேறும் வரை செலுத்த வேண்டும்.
10. "சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்தி கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதன் முடிவு செய்ய உள்ளாட்சி துறை பொருத்தமான அமைப்பு அல்ல "
11. அளிக்கப்பட்ட தகவல்கள் அல்லது ஆவணங்களின் ஏதேனும் தவறு இருப்பின் மேற்படி உத்தரவு எவ்வித காரணமின்றி இரத்து செய்யப்படும்.
12. தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தில் உள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நகல்:

S. சுப்புலட்சுமி, A. மோனிஷா, 5/141, சுண்டக்கரை புதூர்,
வெள்ளியங்காடு, மேட்டுப்பாளையம்.

நகல்:

1. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),ஊராட்சி ஒன்றியம்,
   காரமடை.
2. சார்பதிவாளர், மேட்டுப்பாளையம்.

தலைவர்,
ஜடையம்பாளையம் ஊராட்சி
காரமடை வட்டாரம்

ஊராட்சி படிவம் எண். 6

புத்தக எண். :

பலவகை வரவு ரசீது

அசல்

பற்றுச் சீட்டு எண். : BH № 73109

நாள் : 25/04/2023

..... ஊராட்சி

திரு. அப்புலட அமி & A மோனிகா கிராமம் ஆடபொண்டி என்பவரிடமிருந்து

ரூபாய் 1000/- ரூபாய் One Thousand only மட்டும்)

பரிசுவரைவு கட்டணம் வகைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டது.

616/1A, 1B, 2A, 2B, 3, 617/1, 617/2, 618/1C

கோபிநல்லி, கோபிசெட்டிபாளையம் வட்டம்

பணம் செலுத்துபவரின் கையொப்பம். வரி வசூலிப்பவர். ஊராட்சி தலைவர்.

குறிப்பு 1. இந்த பற்றுச் சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile-யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால் தான் செல்லுபடியாகும்.

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

ஊராட்சி படிவம் எண். 6

புத்தக எண்.

பலவகை வரவு ரசீது

அசல்

பற்றுச் சீட்டு எண். : BH № 73115

நாள் : 25/04/2023

..... ஊராட்சி

திரு. அப்புலட அமி & A மோனிகா கிராமம் ஆடபொண்டி என்பவரிடமிருந்து

ரூபாய் 91100/- ரூபாய் Ninty Seven Thousand One Hundred மட்டும்)

அபிவிருத்தி கட்டணம் வகைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டது.

SF 616/1A, 1B, 2A, 2B, 3, 617/1, 617/2, 618/1C

கோபிநல்லி, கோபிசெட்டிபாளையம் வட்டம்

பணம் செலுத்துபவரின் கையொப்பம். வரி வசூலிப்பவர். ஊராட்சி தலைவர்.

குறிப்பு 1. இந்த பற்றுச் சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile-யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால் தான் செல்லுபடியாகும்.

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

ஊராட்சி படிவம் எண். 6 பல்வகை வரவு ரசீது அசல்

புத்தக எண்.

பற்றுச் சீட்டு எண். : BH № 773114

நாள் : 25/08/2025

..... ஊராட்சி

திரு. [illegible] கிராமம் [illegible] என்பவரிடமிருந்து

ரூபாய் 163000/- ரூபாய் One lakhs Sixty three thousand மட்டும்

வகைக்காக பெற்றுக் கொள்ளப்பட்டது.

SF 616/1A, 1B, 2A, 2B, 3 617/1, 617/2, 618/1C

பணம் செலுத்துபவரின் கையொப்பம். வரி வசூலிப்பவர். ஊராட்சி தலைவர்.

குறிப்பு 1. இந்த பற்றுச் சீட்டு ஊராட்சி தலைவரின் Facsimile-யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால் தான் செல்லுபடியாகும்.

2. பணம் செலுத்துபவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இடது கை பெருவிரல் ரேகை பெறும் இனத்தில் அசல் மற்றும் நகல் இரண்டு பிரதிகளிலும் பெற வேண்டும்.

கோரிக்கை, தேவைப்படுத்தும் வகையில்